தினமணி

**உணவுப் பணவீக்கம் 9.42%**

First Published : 18 Mar 2011 12:00:00 AM IST

புது தில்லி, மார்ச் 17: நாட்டின் உணவுப் பணவீக்கம் மார்ச் 5-ம் தேதியுடன் முடிவடைந்த வாரத்தில் 9.42 சதவீதமாகக் குறைந்தது. முந்தைய வாரத்தில் இது 9.52 சதவீதமாக இருந்தது.

உணவுப் பொருள்களின் விலை குறைந்து வருவதால் வரும் வாரங்களில் இது மேலும் குறையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இருப்பினும் பெட்ரோல் உள்ளிட்ட எரிபொருளின் விலையேற்றம் காரணமாக அரசு எதிர்பார்க்கும் அளவுக்குக் குறையும் என்று எதிர்பார்க்க முடியாது என்று கிரிசில் தரச்சான்று நிறுவனத்தின் பொருளாதார நிபுணர் டி.கே. ஜோஷி குறிப்பிட்டார்.

உணவுப் பணவீக்கம் குறைந்த போதிலும் பழங்கள், பால், புரதம் நிறைந்த பொருள்களின் விலைகள் தொடர்ந்து அதிக விலைக்கு விற்பனையாயின. ரிசர்வ் வங்கி கடனுக்கான வட்டி விகிதத்தை 0.25 சதவீதம் உயர்த்தியது. நடப்பு நிதிஆண்டில் 8-வது முறையாக வட்டிவிகிதத்தை உயர்த்தியுள்ளது. இதன் தாக்கம் வரும் வாரங்களில் தெரியக்கூடும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

மார்ச் இறுதிக்குள் உணவுப் பணவீக்கத்தை 8 சதவீத அளவுக்குக் கட்டுப்படுத்த வேண்டும் என்ற ரிசர்வ் வங்கியின் இலக்கு எட்டக் கூடியதே என்றும் அவர் கூறினார்.

இருப்பினும் மார்ச் 5-ம் தேதியுடன் முடிவடைந்த வாரத்தில் கோதுமை, பருப்பு விலைகள் உயர்ந்தே காணப்பட்டன. சிறு தானியங்களின் விலை கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் 3.88 சதவீதம் உயர்ந்திருந்தது. அரிசி விலை 2.75 சதவீதம் குறைந்திருந்தது. வெங்காயத்தின் விலை 6.65 சதவீதமும், பழங்களின் விலை 19.39 சதவீதமும் உயர்ந்திருந்தது. முட்டை, இறைச்சி, மீன் உணவு வகைகளின் விலை 13.10 சதவீதம் உயர்ந்து காணப்பட்டது. உணவு அல்லாத பிற பொருள்களின் விலை 23.03 சதவீதம் உயர்ந்திருந்தது.

பிப்ரவரி மாதத்தில் ஒட்டுமொத்த பணவீக்க விகிதம் 8.31 சதவீதமாக இருந்தது குறிப்பிடத்தக்கது.

**பச்சைத் தங்கம் பயிரிடலாமே!**

First Published : 17 Feb 2011 12:37:33 AM IST



கடலூர் அருகே தியாகவல்லி கிராமத்தில், மணிலா ஊடுபயிராகப் பயிரிடப்பட்டு உள்ள, கல் மூங்கில்.

கடலூர்: மூங்கில் இலைமேலே தூங்கும் பனி நீரே என்ற சங்க காலப் பாடல் வரிகளை பலரும் அறிந்து இருப்பார்கள்.

÷கவிஞர்களின் கற்பனைக்கு வளம் சேர்க்கும் மூங்கில், இன்று விவசாயிகளின் வாழ்க்கைக்கு வளம் சேர்க்கும் பயிராக மாற்றப்பட்டு வருகிறது. இந்தியாவின் வடகிழக்கு மாநிலங்களில் மூங்கில் பன்னெடுங் காலமாக பயிரிடப்படுகிறது.÷இந்தியக் காடுகளின் பரப்பளவில் மூங்கில் 12.8 சதவீதம் காகித ஆலைகள், ரேயான் தொழிற்சாலைகளிலும் மூலப்பொருளாக, பெருமளவுக்குப் பயன்படுத்தப்படுகிறது.

வலுவாகவும், நீண்டகாலம் கெடாமலும் இருப்பதால், வீடு கட்டவும், கால்நடைத் தீவனங்கள் தயாரிக்கவும், விவசாயத் தொழில்களுக்கும், மேஜை, நாற்காலிகள், கலைப் பொருள்கள் தயாரிக்கவும் பயன்படுகிறது. ÷உலகச் சந்தையில் மூங்கில் பொருள்களின் மதிப்பு ஆண்டுக்கு 10 மில்லியன் டாலராக உள்ளது. 2015-ம் ஆண்டில் 20 மில்லியன் டாலராக உயரும் என்கிறார்கள். இந்தியாவில் மூங்கில் உற்பத்திப் பொருள்களின் மதிப்பு ரூ.6,505 கோடி. மூங்கில் தேவை பெருமளவுக்கு அதிகரித்து வருகிறது.

÷எனவே மூங்கிலை, தமிழ்நாட்டில் வணிக ரீதியாக சாகுபடி செய்ய தோட்டக்கலைத் துறை நடவடிக்கை எடுத்து வருவது விவசாயிகளிடம் நல்ல வரவேற்பைப் பெற்று இருக்கிறது. மூங்கில்

உற்பத்தியைப் பெருக்கி, விவசாயிகளின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதே இத்திட்டத்தின் நோக்கம்.

÷விவசாய வேலைகளுக்கு ஆள்கள் கிடைப்பது இல்லை. தண்ணீர் பற்றாக்குறை, மின்சாரத்தில் நிலையற்ற தன்மை காரணமாக விவசாயம் உபதொழிலாக மாற்றப்படுவதால், பலர் தங்கள் நிலங்களில் சவுக்கு மற்றும் தைல மரங்களை பயிரிடுவது அதிகரித்து வருகிறது. சவுக்கு, தைல மரங்களைவிட மூங்கில் அதிக வருவாய் தரக்கூடிய பயிராகவும், 3 மடங்கு வளர்ச்சி விகிதம் அதிகமாகவும் உள்ளது.

÷வடகிழக்கு மாநிலங்களில் இருந்து கொண்டு வரப்பட்ட முள் இல்லாத மூங்கில் வகைகளை, பல்வேறு தட்பவெப்ப நிலங்களில் விஞ்ஞானிகள் ஆய்வு செய்து, 4 ரகங்களை தமிழ்நாட்டில் பயிரிட ஏற்ற மூங்கில்களாக அறிவித்துள்ளனர். அவை பேம்பூஸô நியூட்டன்ஸ், பேம்பூஸô பலகுவா, வேம்பூஸô வல்காரிஸ், பேம்பூஸô டுல்டா ரகங்கள். தமிழ்நாட்டில் வறண்ட பகுதிகளில் கல் மூங்கில், ஈரச் செழிப்பான பகுதிகளில் பொந்து மூங்கில் அதிகம் பயிரிடப்படுகிறது.

÷மூங்கிலை நடவு செய்ய, நாற்றுவிட்டு நடுவது, மூங்கில் கிழங்கை வெட்டி எடுத்து நடவு செய்தல், மூங்கில் கழிகளை கிழங்குடன் வெட்டி எடுத்து நடுதல், திசு வளர்ப்பு முறை, மூங்கில் கழிகள் மற்றும் பக்கக் கிளைகளை முளைக்க வைத்து நடுதல் எனப் பல வழிமுறைகள் உள்ளன. நாற்றுவிட்டு நடவு செய்தல் சிறந்த முறையாகக் கருதப்படுகிறது. ÷கோடைகாலங்களில் 10 நாள்களுக்கு ஒருமுறை பாத்திக்கு 25 முதல் 50 லிட்டர் வரை நீர ஊற்றினால் நல்ல பலன் கிடைக்கும். மூங்கிலை 200 வகையான பூச்சிகள் சேதப்படுத்தும். என்றாலும் 10-க்கும் குறைவானவைகளே முக்கியமானவை. எனவே ஒருங்கிணைந்த பூச்சி, நோய்க் கட்டுப்பாடு முறைகள் தேவை.

÷பராமரிப்புக்கு ஏற்ப நட்ட 4-ம் ஆண்டு முதல் மூங்கில் கழிகளை வெட்டி அறுவடை செய்யலாம். கல் மூங்கில் ஹெக்டேருக்கு 2,400 கழிகளும், பொந்து மூங்கில் ஹெக்டேருக்கு 1,662 கழிகளும் கிடைக்கும். மூங்கில் சாகுபடி மூலம் ஏக்கருக்கு 6-ம் ஆண்டு ரூ. 25,500 ம், 7-ம் ஆண்டு ரூ. 30,800ம், 8-ம் ஆண்டு ரூ. 36,200ம், 9 முதல் 15-ம் ஆண்டு வரை ரூ. 39,600 வருவாய் கிடைக்கும் என்று வேளாண் துறை தெரிவிக்கிறது. 5 ஆண்டுகளுக்கு மொத்தச் செலவு ஏக்கருக்கு ரூ. 10 ஆயிரம்.

÷இதுகுறித்து கடலூரை அடுத்த தியாகவல்லி விவசாயி சாமி கச்சிராயர் கூறுகையில், மூங்கில் விவசாயத்துக்கு ஹெக்டேருக்கு 2 ஆண்டுகளுக்கு மொத்தம் ரூ. 8 ஆயிரம் அரசு மானியம் வழங்கப்படுகிறது. தியாகவல்லி, திருச்சோபுரம் பகுதிகளில் 5 ஏக்கரில் கல் மூங்கில்

பயிரிட்டுள்ளேன். சவுக்கு மற்றும் தைல மரச் சாகுபடியைவிட மூங்கில் லாபகரமானது. விரைவில் வளரும். 4 ஆண்டுகள் வரை மணிலா, அவரை, முள்ளங்கி, தர்ப்பூசனி போன்றவற்றை ஊடு பயிராகச் சாகுபடி செய்யலாம். 5 ஆண்டுகளுக்குப் பின் ஏக்கருக்கு ரூ. 60 ஆயிரம் வரை லாபம் கிடைக்கும் என எதிர்பார்க்கிறேன் என்றார்.

**மக்காச்சோளம் "தாக்கும் பூச்சிகளும் தடுக்கும் வழிகளும்'**

First Published : 17 Feb 2011 12:40:16 AM IST



காஞ்சிபுரம்: மக்காச்சோளத்தை பூச்சித் தாக்குதலில் இருந்து காப்பாற்றிவிட்டால் குறைந்த முதலீட்டில், குறைந்த நாளில் அதிக லாபம் பார்க்க முடியும்.

÷தற்போது தமிழ்நாட்டில் உணவு மற்றும் தீவனத் தேவைக்காக பற்றாக்குறை உள்ளது. விவசாயிகள் இந் நேரத்தில் மக்காச்சோளம் பயிரிடுவதன் மூலம் நல்ல லாபத்தை பெற முடியும். நல்ல மகசூல் கிடைக்க உயர் விளைச்சல் தரும் வீரிய ஒட்டு ரகங்களை விவசாயிகள் பயிர் செய்ய வேண்டும்.

÷மக்காச்சோளம் 90 முதல் 110 நாள்களிலேயே விளைந்து பலன் கொடுக்கும். மக்காச்சோளத்தை பூச்சித் தாக்குதலில் இருந்து காத்துக் கொண்டால் விவசாயிகள் கூடுதல் லாபம் பெறமுடியும்.

÷குருத்து காயும் நோய் வகை: மக்காச்சோளத்தை தாக்கும் பூச்சிகளை பொறுத்தவரை ஒரு வகையான ஈ இலைகளில் முட்டையிடும். முட்டையில் இருந்து வெளிவரும் புழுக்கள் தண்டைக் குடைந்து செல்லும். ÷இதனால் நடுக்குருத்தின் அடிப்பாகம் பாதிக்கப்படும். முழுச் செடியும் காய்ந்து போவதற்கான வாய்ப்பும் உண்டு. இப்பூச்சி பெரும்பாலும் ஒரு மாத பயிரைத் தாக்கும். மீன், கருவாட்டு பொறியை வைத்து இப் பூச்சிகளை கட்டுப்படுத்தலாம். ஒரு ஹெக்டேருக்கு 12 அல்லது 13 என்ற அளவில் அமைக்க வேண்டும்.

÷இலைகாயும் நோய் வகை: இந்த நோய் மக்காச்சோளத்தை அதிகம் தாக்கும் நோய் ஆகும். இதை அடிச்சாம்பல் நோய் என்று விவசாயத் துறையினர் கூறுகின்றனர்.

÷இந்நோய் தாக்கினால் இலைகளின் அடிப்பாகம் வெண்மையாக மாறும். இலைகள் காய்ந்துவிடும். இலைகளின் நரம்புகள் கிழிந்து விடும். இலை நார் போலக் காணப்படும். ÷இதைக் கட்டுப்படுத்த இந்நோய் தாக்கிய செடிகளை அகற்றி அப்புறப்படுத்த வேண்டும். 0.2 சதவீத மெட்டலாக்சில் மருந்தைத் தெளிக்க வேண்டும்.

÷பூச்சித் தாக்குதல்களை கட்டுப்படுத்தும் முறைகள் குறித்து வேளாண்மைத் துறை அதிகாரிகள் சிலரிடம் கேட்டபோது அவர்கள் கூறியது:

÷பூச்சிகளைக் கட்டுப்படுத்த விதை நேர்த்தி செய்ய வேண்டும். விதை நேர்த்தி குறித்த அப்பகுதி விவசாயத் துறை வல்லுநர்களை கேட்டு தெரிந்து கொள்ளலாம். முன் பருவத்திலேயே விதைக்க வேண்டும்.

÷பூச்சியால் தாக்கப்பட்டு குருத்து காய்ந்த செடிகளை உடனடியாக அகற்ற வேண்டும். மக்காச்சோளத்தைத் தாக்கும் பூச்சிகளுக்கான எதிர்பூச்சிகளான ஊக்குவிப்பதன் மூலம் பூச்சி தாக்குதலை கட்டுக்குள் கொண்டு வரலாம் என்றனர்.

÷இதுகுறித்து விவசாயத்துறை இணை இயக்குநர் விஜயகுமாரிடம் கேட்டபோது, காஞ்சிபுரம் மாவட்டத்தில் மதுராந்தகம், அச்சிறுப்பாக்கம் வட்டத்தில் அதிகம் பயிரிடப்படுகிறது. அவர்களுக்கு உரிய ஆலோசனைகள், பூச்சிக் கட்டுப்படுத்தும் முறைகள் விவசாயத் துறை அதிகாரிகளால் வழங்கப்பட்டு வருகிறது என்றார்.

**தினமலர்**

# கிருஷ்ணகிரியில் தோட்டக்கலை பல்கலை: அவசர சட்டம் பிறப்பிப்பு

**- பா.பாஸ்கர் பாபு-**

தமிழகத்தில், கிருஷ்ணகிரியில் புதிதாக தோட்டக்கலை பல்கலைக் கழகம் அமைத்து அவசர சட்டம் பிறப்பிக்கப் பட்டுள்ளது.

'கிருஷ்ணகிரியில் தோட்டக்கலைக்கு என பிரத்தியேகமாக புதிய பல்கலைக் கழ கம் அமைக்கப்படும்' என்று கடந்த ஜனவரி 7ம் தேதி, சட்டசபையில் கவர்னர் அறிவித் தார். இதை நிறைவேற்றும் வகையில், இம் மாதம் 1ம் தேதியன்று, கவர்னர் பர்னாலா அவசர சட்டம் பிறப்பித்துள்ளார்.

இதன்படி, கோவையில் உள்ள வேளாண்மை பல்கலைக் கழகம் பிரிக்கப் பட்டு, கிருஷ்ணகிரியில் புதிதாக தோட்டக் கலை பல்கலைக் கழகம் அமைக்கப்படும். இங்கு, தோட்டப் பயிர்கள், செடிகள் கட் டுப்பாடு, பூச்சிகள் மற்றும் நோய்கள், பூக் கள் உட்பட தோட்டக்கலை, களப்பயிர்கள் போன்றவை குறித்த படிப்புகள் மற்றும் ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்படும்.

தோட்டக்கலை பயிர் தொடர்பான படிப் புகளை நடத்தும் கல்லூரிகள், இப்பல்க லையால் அங்கீகரிக்கப்படும். இது தவிர, கோவை மற்றும் பெரியகுளத்தில் உள்ள தோட்டக்கலை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி மையங்கள் இதன் இணைப்புக் கல்லூரி களாகச் செயல்படும். மேலும், தமிழகத் தில் உள்ள 15 தோட்டக்கலை கல்வி மற்றும் ஆராய்ச்சி மையங்கள் இதன் கீழ் இயங்கும்.

இந்த பல்கலை, வேளாண்மைத் துறை யின் கீழும், அதன் அமைச்சரின் கீழும் செயல்படும். பல்கலையின் வேந்தராக கவர்னர் இருப்பார்.

இணை வேந்தராக வேளாண் துறை அமைச்சர் இருப்பார். இது தவிர, துணை வேந்தர், இயக்குனர்கள், டீன்கள், தேர்வு கட்டுப்பாட்டு அதிகாரி, பதிவாளர், நிதி அலுவலர் போன்றவர்கள் நிர்வாகத்தில் ஈடுபடுவர்.

வேந்தரின் ஒப்புதல் இல்லாமல், யாருக் கும் கவுரவப் பட்டங்கள் வழங்கப்படாது. துணைவேந்தர் தேர்வு, அலுவல் சாரா உறுப்பினர்கள், ஆட்சி மன்றக் குழு போன்ற அனைத்தும், மற்ற பல்கலைகளில் உள்ளது போல, குறிப்பாக வேளாண்மை பல்கலைக் கழகத்தின் விதிகளைப் போலவே இதிலும் நிர்ணயிக்கப் பட்டுள்ளது.

## கால்நடை வளர்ப்பு விழிப்புணர்வு முகாம் வின்னர் டைரி நிறுவனம் நடத்தியது

பதிவு செய்த நாள் : மார்ச் 18,2011,01:43 IST

செஞ்சி : நெற்குணம் கிராமத்தில் வின்னர் டைரி நிறுவனம் சார்பில் பால் உற்பத்தியாளர்களுக்கு அதி நவீன முறை கால்நடை வளர்ப்பு குறித்த விழிப்புணர்வு முகாம் மற்றும் கால்நடை மருத்துவ முகாம் நடந்தது. விழுப்புரம் மாவட்டம் செஞ்சி தாலுகா சத்தியமங்கலம் வின்னர் டைரி நிறுவனம், நைப் புராஜக்ட் மற்றும் விர்பேக் அனிமல் ஹெல்த் இந்தியா நிறுவனம் இணைந்து திருவண்ணாமலை மாவட்டம் நெற்குணம் கிராமத்தில் பால் உற்பத்தியாளர்களுக்கு விழிப்புணர்வு

முகாம் மற்றும் கால் நடை மருத்துவ முகாம் நடத்தினர். அதி நவீன முறையில் கால்நடைகளை வளர்க்கும் முறை, கால்நடை வளர்ப்பில் உள்ள பிரச்னைகள், பரிகாரங்கள், பசுக்களுக்கு சினைக்காலத்திலும், கன்று ஈன்ற பின்னும் ஏற்படும் பிரச்னைகளை தடுக்கும் முறை குறித்து விர்பேக் அனிமல் ஹெல்த் இந்தியா நிறுவன ஏரியா வர்த்தக மேலாளர் டாக்டர் ராஜேஷ்குமார் விளக்கமளித்தார்.

பசுக்களுக்கு செயற்கை முறையில் கருவுறும் வாய்ப்புகளை அதிகரிப்பது, நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரித்து ஆரோக்கியமாக இருக்க செய்வது, அதிக பால் உற்பத்திக்கான நவீன முறைகள், தீவனத்துடன் தரம் வாய்ந்த தாதுக்களையும், வைட்டமின்களையும் பசுக்களுக்கு வழங்குவதன் அவசியம் குறித்து விளக்கினார்.பால் உற்பத்தி மற்றும் கால்நடை வளர்ப்பு தொடர்பான கேள்விகளுக்கு பதில் அளித்த உற்பத்தியாளர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன.

தொடர்ந்து நடந்த கால் நடை மருத்துவ முகாமில் வின்னர் டைரி டாக்டர்கள் ஸ்ரீஜிஷா, ஜெகதீஸ்வரி ஆகியோர் கால்நடைகளுக்கு சிகிச்சை அளித்தனர். கோமாரி தடுப்பூசி, மலட்டுத்தன்மை நீக்கம், குடற்புழு நீக்கம் ஆகியவற்றிற்கு சிகிச்சை அளித்தனர். வின்னர் டைரி மேற்பார்வையாளர்கள், அளவையர்கள் அக்பர், வெங்கடேஷ் கலந்துக் கொண்டனர்.

**தமிழகம், கேரளாவில் முட்டை விலை 210 காசாக நிர்ணயம்**

பதிவு செய்த நாள் : மார்ச் 18,2011,02:37 IST

நாமக்கல்: தமிழகம், கேரளாவில் முட்டை விலை, 210 காசுகளாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. முட்டை விலை ஒரே நாளில், 13 காசுகள் சரிந்திருப்பது கோழிப்பண்ணையாளர்களை அதிர்ச்சியடையச் செய்துள்ளது. நாமக்கல்லில், தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு கூட்டம் நடந்தது. முட்டை உற்பத்தி, மார்க்கெட் நிலவரம் குறித்து பண்ணையாளர்கள் விவாதித்தனர்.

அதையடுத்து, 223 காசுகளுக்கு விற்பனை செய்யப்பட்ட முட்டை, 13 காசுகள் குறைத்து, 210 காசுகளாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. முட்டை விலை ஒரே நாளில், 13 காசுகள் சரிந்திருப்பது கோழிப்பண்ணையாளர்கள் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.நாட்டின் பிற மண்டலங்களில் முட்டை விலை விபரம்:ஹைதராபாத் 205 காசுகள், விஜயவாடா, தனுகு, 206 காசுகள், சென்னை, 233 காசுகள், மைசூரு, 210 காசுகள், பெங்களூரு, 215 காசுகள், மும்பை, 230 காசுகள், டில்லி, 215 காசுகள், பர்வாலா, 199 காசுகள், கோல்கத்தா, 230 காசுகள்.

இவ்வாறு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.நாமக்கல்லில் நேற்று நடந்த பண்ணையாளர், வியாபாரிகள் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில்ல, முட்டைக் கோழி விலை கிலோ, 25 ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. பல்லடத்தில் நடந்த கறிக்கோழி உற்பத்தியாளர் ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில், அதன் விலை கிலோ, 69 ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டது.

**விலை வீழ்ச்சியால் கால்நடை தீவனமாகும் தக்காளி செடிகள்**

பதிவு செய்த நாள் : மார்ச் 18,2011,02:59 IST

தர்மபுரி: தர்மபுரி மாவட்டத்தில் தக்காளி விலை கடும் வீழ்ச்சி அடைந்திருப்பதால், செடிகளை கால்நடை தீவனமாக்கி வருகின்றனர். தர்மபுரி மாவட்டத்தில் ஆண்டு முழுவதும் கிணற்று பாசன பகுதியில் அதிக அளவில் தக்காளி சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. குறிப்பாக வீரிய ஒட்டு ரக செடிகள் அதிக அளவில் விவசாயிகள் சாகுபடி செய்வதால், உற்பத்தி ஆண்டு முழுவதும் ஏற்ற, இறக்கத்தில் இருப்பதால், விலை வீழ்ச்சி அடையும் காலங்களில் விவசாயிகளுக்கு பெரும் அளவில் நஷ்டம் ஏற்பட்டு வருகிறது.

கடந்த மாதத்தில் தக்காளி விலை கிலோ 50 ரூபாய் வரையில் விற்பனை செய்யப்பட்டது. இதனால், பல விவசாயிகள் தக்காளி சாகுபடியில் அதிக அக்கரை காட்டினர். ஆண்டுதோறும் கோடை காலங்களில் தக்காளி தேவை அதிகம் இருக்கும் இதனால், நல்ல விலை கிடைக்கும் என்ற நம்பிக்கையில் விவசாயிகள் அதிக அளவில் தக்காளிகளை சாகுபடி செய்வார்கள்.

தற்போது, பல இடங்களில் தக்காளி நல்ல உற்பத்தியை கொடுத்து வரும் நிலையில் தக்காளி விலை கடந்த 15 நாட்களாக கிலோ 5 ரூபாய்க்கு விற்பனைக்கு வந்துள்ளது. மேலும் வரவு அதிகம் இருப்பதால், சந்தைக்கு வரும் தக்காளிகள் விற்பனை ஆகாமல் தெருக்களில் வீசி செல்லும் நிலை ஏற்பட்டுள்ளது. தர்மபுரி பகுதி விவசாயிகள் விலை கிடைக்காததால், தக்காளியை அறுவடை செய்யாமல் செடிகளில் அப்படியே விட்டு வருகின்றனர்.

சிலர் கால்நடைகளுக்கு தீவனமாக தக்காளியையும், செடிகளையும் பயன்படுத்தி வருகின்றனர். அதிக அளவில் தக்காளிகளை தீவனமாக பயன்படுத்தினால் கால்நடைகளுக்கு நோய் தாக்கும் அபாயம் இருப்பதை அறியாமல் விவசாயிகள் கால்நடை தீவனங்களாக பயன்படுத்தி வருகின்றனர். நல்ல விலை கிடைக்கும் என எதிர்பார்த்து தக்காளி சாகுபடி செய்த விவசாயிகளுக்கு பெரும் நஷ்டம் ஏற்பட்டுள்ளது.

**வெயில் உக்கிரத்தால் தர்பூசணி, இளநீர் விலை உயர்வு**

பதிவு செய்த நாள் : மார்ச் 18,2011,02:59 IST

தர்மபுரி: தர்மபுரியில் வெயில் உக்கிரம் அதிகரித்து இருப்பதை தொடர்ந்து இளநீர் மற்றும் தர்பூசணி பழங்கள் விற்பனை விலை அதிகரித்துள்ளது. வெப்ப மண்டல பகுதியான தர்மபுரி மாவட்டத்தில் கோடை காலங்களில் வெயில் உக்கிரம் அதிகமாகவும், குளிர் காலங்களில் பனி காற்றின் தாக்கம் அதிகம் இருக்கும். பிப்ரவரி மாத துவக்கத்தில் இருந்து மாவட்டத்தில் வெயில் உக்கிரம் அதிகம் இருந்தது. கடந்த இரு நாட்களுக்கு முன் வரையில் காலை நேரம் பனியும், தொடர்ந்து வெயில், காற்று என சீதோஷண நிலையில் பெரும் மாற்றம் இருந்தது.

கடந்த இரு நாட்களாக மீண்டும் வெயில் உக்கிரம் அதிகரிக்க துவங்கியுள்ளது. கோடை காலங்களில் வெயில் உஷ்ணத்தையும், தாகத்தையும் தணிக்க உதவும் இளநீர் மற்றும் தர்பூசணி பழங்கள் விற்பனை அமோகமாக நடக்கும். கோடை கால விற்பனையை குறி வைத்து தர்மபுரி மாவட்டத்தில் பென்னாகரம், இண்டூர், பாப்பாரப்பட்டி, பாப்பிரெட்டிப்பட்டி உள்ளிட்ட பகுதிகளில் அதிக அளவில் தர்பூசணி பழங்கள் சாகுபடி செய்யப்பட்டுள்ளது.
தற்போது, நாட்டு ரக தர்பூசணி பழங்கள் அறுவடை செய்யப்பட்ட போதும், திண்டிவனம் பகுதியில் இருந்து அதிக அளவில் தர்மபுரி மாவட்டத்துக்கு தர்பூசணி பழங்கள் விற்பனைக்கு வரத்துவங்கியுள்ளன. கடந்த காலங்களில் கிலோ 8 ரூபாய் முதல் 15 ரூபாய் வரையில் விற்பனை செய்யப்பட்டது.

தற்போது, ஒரு கிலோ 15 முதல் 20 ரூபாய் வரையிலும், உள்ளூர் தர்பூசணி பழங்கள் கிலோ 10 ரூபாய் முதல் 15 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது. கடந்தாண்டை விட வெளியூர்களில் இருந்து வரும் தர்பூசணி பழங்களுக்கு போக்குவரத்து செலவினங்கள் உள்ளிட்டவைகள் விலை ஏற்றம் அடைந்துள்ளதால், சில்லறை விற்பனையில் தர்பூசமி பலம் ஒரு துண்டு 10 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது.

கடந்தாண்டு 2 ரூபாய் முதல் 5 ரூபாய் வரையில் துண்டின் அளவுக்கு ஏற்றப்படி தர்பூசணி விற்பனை செய்யப்பட்டது. தற்போது, 10 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படும் பழங்களை ஏழைகள் வாங்கி சாப்பிட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. வரும் நாட்களில் உற்பத்தி அதிகரித்து வரவு அதிகம் இருந்தால், விலை குறைய வாய்ப்பு இருந்த போதும் சில்லறை விற்பனையை பொறுத்த வரையில் விலை குறைய வாய்ப்பு இல்லை.

அதே போல் இளநீர் விற்பனையும் தற்போது, சூடு பிடித்த நிலையில் தர்மபுரி மாவட்டத்தில் விளையும் இளநீர் கர்நாடகா மாநிலத்துக்கு அதிக அளவில் விற்பனை செய்யப்படுவதால், ஒரு இளநீர் 10 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது. இதனால், ஏழைகள் இளநீர் வாங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. தர்மபுரி உழவர் சந்தையில் ஒரு இளநீர் 8 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது. இங்கும் குறைந்த அளவே விற்பனை செய்வதால், காலை நேரத்தில் செல்வோர் மட்டும் இளநீர் வாங்க முடியும் நிலை ஏற்பட்டுள்ளது.

**பசுந்தீவனம் தட்டுப்பாடு மாடு வரத்து அதிகரிப்பு**

பதிவு செய்த நாள் : மார்ச் 18,2011,02:33 IST

ஈரோடு: ஈரோடு மாவட்டத்தில் பச்சை தீவனத்துக்கு கடும் கிராக்கி ஏற்பட்டுள்ளதால் ஈரோடு மாட்டுச் சந்தைக்கு நேற்று மாடுகளின் வரத்து அதிகரித்தது.ஈரோடு கருங்கல்பாளையம் மாட்டுச் சந்தை வாரந்தோறும் வியாழக்கிழமை அன்று கூடுகிறது. இங்கு வாரந்தோறும் ஆயிரத்துக்கும் குறைவான மாடுகளே விற்பனைக்கு வரும். ஈரோடு மற்றும் அதன் சுற்றுவட்டாரப் பகுதியான சிவகிரி, மொடக்குறிச்சி, பொள்ளாச்சி, திருப்பூர், கோவை, பவானி, அந்தியூர், அம்மாபேட்டை, ஜம்பை ஆகிய பகுதிகளில் இருந்து கறவை மற்றும் எருமை மாடுகளும் விற்பனைக்காக விவசாயிகளும், வியாபாரிகளும் கொண்டு வருகின்றனர்.

கோடை காலம் துவங்கி விட்டாலே கால்நடைகளுக்கு பச்சை தீவனம் பற்றாக்குறை ஏற்படுவது இயற்கை. கறவை மாடுகள் வைத்துள்ள விவசாயிகள் பச்சை தீவினமின்றி சோளத்தட்டு, வைக்கோல், ஆகியவற்றை வைத்து சமாளித்து வருகின்றனர். கால்நடையை வைத்து பராமரிக்க முடியாத விவசாயிகள் சிலர் விற்று வருகின்றனர்.ஈரோடு மாட்டுச் சந்தை மேலாளர் முருகன் கூறியதாவது: ஈரோடு மாவட்டத்தில் கால்நடைகளுக்கு பச்சை தீவனம் கடும் கிராக்கி ஏற்பட்டுள்ளது. அதனால் விவசாயிகள் கால்நடைகளை விற்று வருகின்றனர். அதனால் மாடுகளின் வரத்து நேற்று நன்றாக இருந்தது.

நேற்றைய நிலவரப்படி 500 சிந்து மாடுகளும், 250 எருமை மாடுகளும் விற்பனைக்காக வியாபாரிகள் நேற்று கொண்டு வந்திருந்தனர். சிந்து இன மாடுகள் 12 ஆயிரம் முதல் 32 ஆயிரம் ரூபாய் வரையும், எருமை மாடுகள் 14 ஆயிரம் முதல் 30 ஆயிரம் ரூபாய் வரையிலும் விலைபோனது. இவ்வாறு அவர் கூறினார்.

**"மண்வளம் பெருக உயிர் உரம் அவசியம்'**

பதிவு செய்த நாள் : மார்ச் 18,2011,01:13 IST

கோவை : "மண்ணின் வகை, தரத்துக்கேற்ப தேவைப்படக்கூடிய இயற்கை உரங்களின் அளவை நிர்ணயித்து, விவசாயிகளுக்கு தெரிவிக்க வேண்டும்' என வேளாண் பல்கலை கருத்தரங்கில் வலியுறுத்தப்பட்டது. கோவை, வேளாண் பல்கலையில் மண் நல மேம்பாட்டின் மூலம் பயிர் உற்பத்தி திறனை அதிகரித்தல் என்ற தலைப்பில் கருத்தரங்கு நடந்தது. பேராசிரியர் வேலு வரவேற்றார். துணைவேந்தர் முருகேசபூபதி தலைமை வகித்தார்.

போபால், தேசிய மண்ணியல் நிறுவன இயக்குனர் சுப்பாராவ் முன்னிலை வகித்து பேசியதாவது: பயிர் உற்பத்தி கடந்த 10 ஆண்டுகளாக குறைந்து வருகிறது. உரங்கள் அதிகளவில் பயன்படுத்தப்பட்டாலும், விளைப்பொருட்களின் மகசூல் குறைவாகவே உள்ளது. மண் வளத்தை மேம்படுத்துவது கட்டாயமாகிறது. விளைப்பொருட்களின் உற்பத்தியை அதிகரிக்க மண்ணுக்கு இயற்கை உரங்கள் அளிக்க வேண்டும். தற்போதுள்ள விவசாயிகள் இயற்கை உரங்களை அதிகளவில் பயன்படுத்துவதில்லை. மண் நலத்தை மேம்படுத்தி, மகசூலை அதிகரிக்கக்கூடிய இயற்கை, மாற்று உரங்களை விஞ்ஞானிகள் கண்டுபிடித்து விவசாயிகளிடம் விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும்.

ரசாயன உரங்களின் விலையும் அதிகரித்து வருகிறது. தழைச்சத்து, மணிச்சத்துடன் கூடிய "டை அம்மோனியம் பாஸ்பேட்' உரங்கள் விவசாயத்தில் முக்கியப்பங்கு வகிக்கிறது. இவற்றின் விலை அதிகரித்து வருவதால், விவசாயிகள் திணறுகின்றனர்.உயிர் உரங்களின் பயன்பாட்டையும் அதிரிக்க வேண் டும். தேவையான அளவு உயிர் உரங்கள் உற்பத்தி செய்யப்படுவதில்லை.

மண்ணின் தன்மைக்கேற்ப வாய்ப்புள்ள இடங்களில் இயற்கை விவசாயத்தை பின்பற்ற விவசாயிகள் முன் வரவேண்டும். மண்ணின் தன்மையை பரிசோதித்து குறிப்பிட்ட நிலங்கள் என்ன பயிர்களுக்கு ஏற்றது என ஆய்வு செய்து, விவசாயிகளிடம் பரிந்துரைக்க வேண்டும்.

மண்ணின் தன்மைக்கேற்ப விளைப் பொருட்களை உற்பத்தி செய்யும்போது, அதிக மகசூல் கிடைத்து லாபம் பார்க்கலாம். உரங்கள் தொடர்ந்து பயன்படுத்தப்படும்போது கார்பன் டை ஆக்சைடு அதிகளவில் வெளிப்படும் வாய்ப்புள்ளது; சுற்றுச்சூழல் பாதிக்கப்படாமல் பாதுகாப்பு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். மண்ணின் வகை, தரத்துக்கேற்ப தேவைப்படக்கூடிய இயற்கை உரங்களின் அளவை நிர்ணயித்து விவசாயிகளுக்கு தெரிவிக்க வேண்டும்.

சமச்சீர் உரமிடுதலும் முக்கியமானது. விவசாயத்தில் "நானோ' தொழில்நுட்பத்தை பயன்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு, சுப்பாராவ் பேசினார்.

**வெள்ளரி விற்பனை அமோகம்!**

பதிவு செய்த நாள் : மார்ச் 18,2011,01:25 IST

திருப்பூர் : நீர்சத்து நிறைந்த வெள்ளரிக்காய் விற்பனை, திருப்பூரில் துவங்கியுள்ளது.வெயில் காலம் துவங்கினாலே தர்பூசணி, பப்பாளி உள்ளிட்ட பழங்கள், பழரசம், ஜூஸ் வகைகள் விற்பனைக்கு வரும். இந்தாண்டு இரண்டு மாதத்துக்கு முன்பே வெயில் துவங்கியதால், இவர்களின் வியாபாரம் சூடுபிடிக்கத் துவங்கியுள்ளது.ஆங்காங்கே தர்பூசணி, மோர் மற்றும் பழரசங்கள் விற்பனை செய்யும் கடைகள் முளைத்துள்ளன.

சில நாட்களாக நகரில் பல இடங்களில் வெள்ளரிக்காய் வியாபாரம் சூடுபிடிக்கத் துவங்கியுள்ளது. காய்கறி வியாபாரிகள் பலர் செலவு மிச்சம் என எண்ணி, வெள்ளரிக்காய் வியாபாரத்தில் இறங்கியுள்ளனர். திருப்பூர் மாநகராட்சி அலுவலகம் முன், கலெக்டர் அலுவலகம் முன், குமரன் ரோட்டில், கோர்ட் வீதி, அவிநாசி ரோடு என முக்கிய வீதிகளில் வெள்ளரிக்காய் கடைகளை பார்க்க முடிகிறது.

வியாபாரிகளிடம் கேட்ட போது,"திண்டுக்கல், ஒட்டன்சத்திரம், தாராபுரம், கரூர் பகுதிகளில் இருந்து வெள்ளரிக்காய் கொண்டு வருகிறோம். காலை 11.00 முதல் பிற்பகல் 3.00 மணி வரை மட்டுமே வியாபராம். ஒரு கிலோ 35 ரூபாய்க்கும், சிறிய அளவிலான பீஸ் ஏழு ரூபாய்க்கும், அதைவிட பெரிய பீஸ் 12 முதல் 15 ரூபாய்க்கும் விற்கிறோம். கடந்தாண்டு மார்க்கெட்டில் மட்டுமே கிடைத்த வெள்ளரிக்காய், தற்போது தள்ளுவண்டிகளிலும் கிடைக்கிறது,' என்றனர்.

**உணவு விலை குறைக்க கோரிக்கை**

பதிவு செய்த நாள் : மார்ச் 18,2011,03:03 IST

திருச்சி: நுகர்வோர் மற்றும் சேவை சங்கங்களின் கூட்டமைப்பு சார்பில் வெளியிட்ட அறிக்கை: அகில இந்திய அளவில் உணவுப்பொருட்களின் விலை வீக்கம் 19.5 சதவீதத்திலிருந்து தற்போது 10.50 சதவீதமாக குறைந்துள்ளது. காய்கறிகள் விலையும் மிகவும் மலிந்துள்ளது. எனினும், ஹோட்டல்கள் விலை ஏறிய போது உணவுப் பண்டங்கிளின் விலையை உயர்த்தியது. அது அப்படியே தொடர்கிறது. எனவே, "உணவு பண்டங்களின் விலையை குறைக்க வேண்டும்' என

ஹோட்டல் உரிமையாளர்களைக் கேட்டுக்கொள்கிறோம். மேலும், ஏழை, எளிய மக்கள் குடிக்கும் "டீ', காபியின் விலையையும் குறைக்க வேண்டும்.

**தி.மருதூரில் பருத்தி உழவர் வயல்வெளிப் பள்ளி துவக்கம்.**

பதிவு செய்த நாள் : மார்ச் 18,2011,03:04 IST

கும்பகோணம்: மத்திய ஜவுளித்துறை அமைச்சகத்தின் கீழ் சிமா பருத்தி அபிவிருத்தி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் சார்பில் பருத்தி உழவர் வயல்வெளிப் பள்ளி தொடக்க விழா திருவிடைமருதூரில் நடந்தது. கோவை சிமா பருத்தி மற்றும் ஆராய்ச்சி கழக முதன்மை பருத்தி ஆராய்ச்சி அபிவிருத்தி அலுவலர் கூடலிங்கம் விழாவுக்கு வந்தவர்களை வரவேற்று, பருத்தி உழவர் வயல்வெளிப் பள்ளி பற்றி கருத்துகளை எடுத்துரைத்தார். தஞ்சை மாவட்ட வேளாண்ம இணை இயக்குனர் பாலசுப்பிரமணியன் தலைமை வகித்து, பருத்தி விதை தொழில் நுட்பங்களை எடுத்து கூறி, பருத்தி வயல் வெளிப் பாடத் தொகுப்பு 2011 புத்தகத்தை வெளியிட்டார்.

தஞ்சை மாவட்ட வேளாண் துணை இயக்குனர் ராஜ்குமார், ஆடுதுறை நெல் ஆராய்ச்சி நிலைய பேராசிரியர் சுப்ரமணியன், திருவிடைமருதூர் வேளாண் உதவி இயக்குனர் உதயகுமார், வேளாண் அலுவலர்கள் ஈஸ்வரன், விதைச்சான்று அலுவலர் லெட்சுமிகாந்தன், ஆடுதுறை மண் பரிசோதனை நிலைய வேளாண் அலுவலர் சிவகாமி ஆகியோர் பருத்தி வயல் வெளி பள்ளி பற்றி கருத்துகளை விளக்கினர். பருத்தி விவசாயிகள் 70 பேர் பங்கேற்றனர். சிமா பருத்தி அபிவிருத்தி ஆராய்ச்சி கழக கும்பகோணம் கிளை பருத்தி உதவி பருத்தி அபிவிருத்தி அலுவலர் சௌந்தரராஜன் நன்றி தெரிவித்தார். இதற்கான ஏற்பாடுகளை முனுசாமி செய்திருந்தார்.

**ஏலக்காய் பறிமுதல்**

பதிவு செய்த நாள் : மார்ச் 18,2011,01:29 IST

தேனி : தேனி கூட்டுறவு சார்பதிவாளர் பாலசுப்பிரமணி தலைமையிலான வாகன சோதனை குழுவினர் தேவாரத்தில் வாகன சோதனை மேற்கொண்டிருந்தனர். அப்போது கேரளாவில் இருந்த வந்த ஜீப்பினை சோதனை செய்தனர். அதில் 50 கிலோ எடையுடன், ஏலக்காய் மூடைகள் இருந்தன. இதற்கு கணக்கு ஏதும் இல்லாததால் பறிமுதல் செய்து, விற்பனை வரித்துறையினரிடம் ஒப்படைத்தனர்.

**நிலத்தின் தழைச்சத்தை அதிகரிக்க தக்கை பூண்டு பயிரிட ஆலோசனை**

பதிவு செய்த நாள் : மார்ச் 18,2011,03:37 IST

திருநெல்வேலி : சேரன்மகாதேவி பகுதியில் உள்ள விவசாய நிலங்களில் தக்கைபூண்டு பசுந்தாளுர பயிரினை பயிரிடுமாறு சேரன்மகாதேவி வேளாண் உதவி இயக்குநர் ஜெயசெல்வின் இன்பராஜ் தெரிவித்துள்ளார்.
இது குறித்து அவர் அறிக்கையில் கூறியிருப்பதாவது; சேரன்மகாதேவி பகுதியில் தற்போது பிசான நெற்பயிர்கள் அறுவடையாகும் தருணத்தில் உள்ளது. விவசாயிகள் இந்த நிலத்தில் மீண்டும் நெற்பயிரை பயிரிடுவதற்கு முன் தக்கைப் பூண்டு பசுந்தாளுர பயிரினை தங்கள் நிலத்தில் பயிரிட்டு 35-45 நாளில் அதனை மடக்கி உழுவதன் மூலம் நிலத்தில் தழைச்சத்து நிலைநிறுத்தப்படுகிறது.

இதனால் மண்ணில் பொல, பொலப்புத்தன்மை அதிகமாகி நீர்பிடிப்பு தன்மையையும் அதிகமாக்குகிறது. மேலும் தழைச்சத்து உரத்தின் செலவு குறைவதோடு, களைகளையும் கட்டுப்படுத்துகிறது. போதுமான அளவு தக்கை பூண்டு விதைகள் சேரன்மகாதேவி மற்றும் வீரவநல்லூர் விரிவாக்க மையங்களில் இருப்பு வைக்கப்பட்டுள்ளது. இதனை என்ஏடிபி., திட்டத்தில் மான்ய விலையில் விவசாயிகள் பெற்ற பயனடையலாம். இத்தகவலை சேரன்மகாதேவி வேளாண் உதவி இயக்குநர் ஜெயசெல்வின் இன்பராஜ் அறிக்கையில் கூறியுள்ளார்.